திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு அரசு முன் வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பகுதி நேரக் கடைகளைத் திறப்பதைப் பொறுத்தவரையில் அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற துணைப்பதிவாளர்களுக்கே அதிகாரம் தந்தால் காலதாமதம் தவிர்க்கப்படும். எனவே துணைப் பதிவாளருக்கு அது குறித்து அதிகாரம் அளிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போது அரசு எடுத்திருக்கிற முடிவு அரசாங்கத்திற்குச் செலவு இல்லாமல் இலவசமாகக் கட்டிடங்கள் கொடுத்தால் அந்த இடங்களில் பகுதி நேரக் கடைகளுக்கு அனுமதிக்கப்படும் என்பது தான். அவ்வாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர் கூட்டுறவு சங்க முறைகேடுகள்.

*3360 **திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களின் கூட்டுறவு நாணய சங்கத்தின் வைப்பு மற்றும் ஊழியர்களுக்கு கடன் வழங்குவதில் ரூ. 5.41 இலட்சம் முறைகேடுகள் நடந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம். தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிப் பணியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ. 3.48 இலட்சம் மட்டும் கையாடல் நடைபெற்றுள்ளது. இந்த கையாடல் 1980-81 முதல் 1984-85-ம் ஆண்டு வரை நடந்துள்ளது.

(ஆ) கையாடலில் சம்பந்தப்பட்டவர்கள் மீது காவல் துறையில் புகார் செய்யப்பட்டு புலன் விசாரணைக்குப் பின் சென்னை ஜார்ஜ் டவுன் குற்றவியல் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு தற்போது விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. கையாடல் செய்யப்பட்ட தொகையை வசூலிக்க தண்டத் தீர்வை நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

1989 நவம்பர் 2]

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, இந்த முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் யார், யார்? அவர்கள் மீது குற்றவியல் வழக்கு தொடரப்பட்டதோடு அல்லாமல் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கச் செயல்பாடு குறித்து 1986-87ஆம் ஆண்டில் விசாரணை மேற்கொண்டு மூன்று இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் ரூபாய் சங்க நிதி கையாடல செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கையாடலிலே ஈடுபட்டவர்கள் அந்தச் சங்கத்தின் நிர்வாகிகள், அந்த போர்டு கலைக்கப்பட்டு இப்போது தனி அலுவலர் நியமிக்கப்பட்டு அவர்கள் மீது நான் சொன்ன இந்த நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படிக் கையாடல் செய்த நேரத்தில் ஒரே நேரத்தில் கையாடல் செய்யாமல் சென்னை மத்திய கூட்டுறவு வங்கிக் கணக்கிலிருந்து பெற்ற தொகைகளைச் சரியாகக் கணக்கில் கொண்டு வராமல் கையாடல் செய்த வகையில் மோசடி செய்தது 2 லட்சத்து 17 ஆயிரத்து 590 ரூபாய். அலங்கார் பிரிண்டர்ஸ் என்கிற பெயரில் செலவு செய்ததாக பொய்யாக கணக்கு எழுதி மோசடி செய்தது 2 ஆயிரத்து 525 ரூபாய். முன் பணத் தொகைகளை வேறு செலவினங்களுக்குச் செய்ததாக பொய்க் கணக்கு எழுதி மோசடி செய்தது 22 ஆயிரத்து 845 ரூபாய். அதுபோல் நுகர்வோர் கடன் தொகைகளைப் பற்று எழுதாமல் மோசடி செய்தது 31 ஆயிரம் ரூபாய். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கன சேமிப்பு நிதி வட்டி பட்டுவாடாவில் மோசடி செய்து கையாடல் செய்த தொகை 56 ஆயிரத்து 397 ரூபாய். அதுபோல பொய் கணக்கு எழுதி மோசடி செய்தது 17 ஆயிரத்து 800 ரூபாய் ஆகும். இப்படிப் பல்வேறு தலைப்புகளில் இந்த மோசடிகள் நடைபெற்றிருக்கின்றன. அவர்கள் எல்லோர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இச்சங்க நிர்வாகக் குழு 7—8—1986 அன்று கலைக்கப்பட்டு துறை அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கையாடல்கள் எல்லாம் 3 அல்லது 4 ஆண்டுக் காலம் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. இந்த முறைகேடுகளைக் காலத்தே கண்டு பிடிக்கவும், தடுத்து நிறுத்தவும் தவறிய கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இதனுடைய முழு விவரம்—தீர்ப்பு கிடைத்த பிறகு, இதற்கு யார் யார் பொறுப்போ அவர்களைப் பற்றிய தகவல்—அரசுக்குக் கிடைக்குமேயானால் நிச்சயமாக யார், எந்த அதிகாரியாக இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை நகரில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம்.

*3200. திரு. ஆர். சாமிநாதன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மதுரை நகரில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள கல்பாலம் சீர்செய்யப்படாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர்செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எதிர்வரும் ஆண்டுகளில் பராமரிப்பு நிதிகளைக் கொண்டு கட்டம்கட்டமாக சீரமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கல்பாலத்தில் ஏற்கெனவே சைக்கிள் ரிக்சா, மாட்டு வண்டி, லாரிகள் போன்றவை சென்று கொண்டிருந்தன. இப்போது தினமும் காலையிலும், மாலையிலும் நகரப் பேருந்துகளும் அந்தப் பகுதியில் திருப்பி விடப்படுகின்றன. எனவே மக்கள் அவசரமாக மருத்துவ மனைக்கோ அல்லது நீதிமன்றங்களுக்கோ செல்ல போக்கு வரத்து நெரிசல் அங்கே இடைஞ்சலாக இருக்கிறது. இந்தப் போக்குவரத்து இடைஞ்சலைத் தவிர்க்க மதுரை கல்பாலத் திற்கு அருகே, கிழக்கே அமைந்துள்ள ஆல்பர்ட் விக்டர் மேம்பாலத்தை விரிவுபடுத்தியோ அல்லது மதுரை கல்பாலத் திலிருந்து மேற்கே 4 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள காமராஜ் மேம்பாலத்திற்கு இடைப்பட்ட இடத்தில், மதுரை தெற்குப் பாகத்தில் இருந்து வடகரைக்குச் செல்ல தனியாக ஒரு தரைப் பாலத்தையோ அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.